<u>சுருக்கம்</u>

நிர்வாகம் – தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை – பத்திரிகையாளர் ஓய்வூதியம் – தமிழ்நாட்டில் உள்ள ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.6,000/–லிருந்து ரூ.7,500/– ஆக உயர்த்தி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்.4)த் துறை</u>

அரசு ஆணை (நிலை) எண்: 246 நாள்: 07.10.2013

திருவள்ளுவர் ஆண்டு 2044

விஜய வருடம் புரட்டாசி மாதம் – 21 ம் நாள்

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.147. செய்தி மற்றும் சுற்றுலா (செய்தி வெளியீடு)த் துறை, நாள்.03.04.1986.

2. அரசாணை (நிலை) எண் 293, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள் 16.07.2010.

3. அரசாணை (நிலை) எண் 191, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்.4)த் துறை, நாள் 14.09.2011.

-----

<u>ஆணை:</u>

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், பத்திரிகைத் துறையில் நீண்டகாலமாக பணியாற்றி, சமுதாய விழிப்புணர்விற்கு பாடுபட்டு, பணியிலிருந்து ஓய்வுபெற்று, வறுமை நிலையில் உள்ள பத்திரிகையாளர்களின் சமூகப் பணியைக் கருத்தில் கொண்டு நலிவடைந்த பத்திரிகையாளர்களுக்கு நிதி உதவி அளிக்க வகை செய்து மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 14.04.1986 முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டபோது மாதம் ரூ.250/– ஓய்வூதியம் வழங்கப்பட்டது. பின்னர் படிப்படியாக உயர்த்தப்பட்டு மேலே 2–ல் படிக்கப்பட்ட அரசாணையின் படி பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.4,000/–லிருந்து ரூ.5,000/–ஆக உயர்த்தி வழங்க ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலும் கடைசியாக மேலே 3–ல் படிக்கப்பட்ட அரசாணைப்படி தமிழ்நாட்டில் உள்ள ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.5,000/–லிருந்து ரூ.6,000/– ஆக உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவையில் 14.5.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் பத்திரிகையாளர்களது குடும்ப சூழ்நிலைகளையும் தற்போதைய காலசூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு பத்திரிகையாளர்களின் மாதாந்திர ஓய்வூதியத்தொகை ரூ.6,000/–லிருந்து ரூ.7,500/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

4. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட மேற்படி அறிவிப்பினை செயற்படுத்தும் பொருட்டு தற்போது பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியமானது ரூ.6,000/–லிருந்து ரூ.7,500/– ஆக (ரூபாய் ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) உயர்த்தியும் இதனை இவ்வரசாணை வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைபடுத்தவும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

'' 2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் –60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் –102 சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஒய்வூதியம் –I திட்டத்தில் சேராதது – AH தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதிய சலுகை வழங்கும் திட்டம் – 27 ஒய்வூதியங்கள் – 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள்'' (த.தொ.கு. 2235 60 102 AH 2750)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ''ஒரு புது துணைப் பணித் திட்டம்'' குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன் பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு – செலவு–1)த்துறையில் தனியாகப் பிறப்பிக்கப்படும். எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வரவு – செலவு–1)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர்/இணைச் செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2013–2014–ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர்/இணைச் செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9 அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 51793/நிதி(தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்)துறை/ 2013, நாள். 03.10.2013 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1441 (ஆயிரத்து நானூற்று நாற்பத்தொன்று) –ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மூ.இராசாராம்,
அரசு செயலாளர்.

பெறுநர் :
இயக்குநர்/இணைச் செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தமிழ்நாடு
மாநில கணக்காயர் (கணக்குகள் (ம) பணிவரவு) சென்னை–18
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 35/18
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், ஈ.வி.கே.சம்பத் மாளிகை, சென்னை–6
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை –5/35/6
நகல்
நிதி( தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி )த்துறை
நிதி (வரவு செலவு பொது.II)த்துறை
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (வரவு செலவு)த்துறை
செய்தி–ஒலிபரப்பு அமைச்சகம், புதுதில்லி
அனைத்து துறை செயலாளர்கள்
அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள்
சென்னை நிருபர்கள் சங்கம், சென்னை–2
தலைவர், சென்னை பத்திரிக்கையாளர் சங்கம், சென்னை
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி ( வரவு செலவு) மற்றும் (கணக்குகள்) த்துறை, சென்னை–9
இருப்புக்கோப்பு/உதிரி நகல்கள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

7.10.2013

பிரிவு அலுவலர்